# நிறுவன ரீதியிலான ஆற்றல்கள்.

**உயர் தகவல் தொழில்நுட்ப மற்றும் கல்வி சமூக அபிவிருத்தி நிறுவனம் (High Information Technology Education and Social Development Organization - HITESDO)** ஆனது ஒரு தன்னார்வ தொண்டு நிறுவனமாகும். இந்த நிறுவனம் நலிவுற்ற சமூகங்களின் வாழ்வாதாரம், தகவல் தொழில்நுட்பம், கல்வி, போசாக்கு, சுய கௌரவம் மற்றும் ஒற்றுமையினை வளர்தெடுக்கும் நோக்கில் 2003ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு செயற்பட்டு வந்தது. இவ் நிறுவனத்தில் உள்ளவர்கள் தன்னார்வ தொண்டு நிறுனங்களில் பல ஆண்டுகளாக சேவை செய்த அனுபவம் மற்றும் பட்டதாரிகள், ஓய்வுபெற்ற அதிகாரிகள், தகவல் தொழில்நுட்ப வல்லுனர்கள் இன்னும் சொல்லப்போனல் இன மொழி மத வேறுபாடு இன்றி அனைவரையும் ஒரு குடைக்கீழ் உள்ளடக்கிய ஓர் சங்கமம் இவ்வாறு இருக்கையில் நாட்டில் ஏற்பட்டு வந்த உள்நாட்டு யுத்தத்தினால் பாதிக்கபட்டு பட்டு மக்கள் மீண்டுவரும் சந்தர்ப்பத்தில் முழு உலகையுமே உலுக்கி கோரத்தாண்டவம் ஆடிய “ஆழிப்பேரலை” முழு உலகிலும் இருந்து மூன்று இலட்சத்துக்கு மேல் மனித உயிர்களைக் காவு கொண்ட சுனாமி இலங்கையையும் விட்டுவைக்காமல் ஏறத்தாள முப்பதாயிரத்துக்கு மேல் இன, மொழி, பால், வயது வேறுபாடு இன்றி உயிர்களை காவுகொண்டது. அந்த காலகட்டத்தில் தொண்டு நிறுவனங்களும் எந்த வித பாகுபாடுமின்றி மக்களுக்கு தம்மாலான உதவிகளை வழங்கி வந்தது உயர் தகவல் தொழில்நுட்ப மற்றும் கல்வி சமூக அபிவிருத்தி நிறுவனம் அதன் அங்கத்தவரின் நன்கொடைகளையும் அவர்களின் சரீர உதவிகளையும் வழங்கத் தவறவில்லை. அதற்குப் பின்னதாக எமக்கு ஓர் அரச அங்கீகாரம் பெறவேண்டும் என்ற தேவையும் கடைப்பாடும் ஏற்பட்டது. இன் நிலையில் அப்போது தான் எமது சேவையை மக்களுக்கு என்னும் விரிவாக வழங்கமுடிம் எண்ணிய முகாமைத்துவம் மற்றும் உறுப்பினர்கள் இதன் பிற்றபாடு 13.07.2005ம் ஆன்டு அப்போது இருந்த வடக்கு – கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் கீழ் மன்றமாகப் பதிவு செய்து. NEP/ME/CA/TR/06/05 எனும் இலக்கமும் வழங்கப்பட்.டது.

இக் காலகட்டத்தில் சமூகமட்ட அமைப்புக்களுக்கும் தன்னார்வ தொண்டு நிறுவன ஊழியர்களுக்கும் இன்னும் சொல்லப்போனால் அரச திணைக்களங்களுக்களுக்கும் பல பயிற்சி நெறிகளை வழங்கியுள்ளது. அதே சமயம் மக்களுக்கிடையில் ஒரு தொடர்பாடலை மேம்படுத்தி அதன் மூலம் மக்களால் முன்வைக்கப்படும் விண்ணப்பங்களை பருசீலித்து அதில் நிறுவனத்தினால் தீக்கக்கூடிய பிரச்சினைகளை தீர்த்து வைத்து ஏனைய பிரச்சனைகளை உரிய முறையில் தீர்ப்பதற்கான அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்னளுக்கு பரிந்துரைக்கப்பட்டு அதன் மூலம் முடியுமானளவு நலிவுற்ற சமூகத்திற்கு சேவைசெய்து வந்துள்ளது.




எமது பிரதான நோக்கம் தகவல் தொழில்நுட்பத்தினை கிராம மட்டத்திற்கு எடுத்துச் செல்வதே எமது நோக்கமாகும். இருப்பினும், அம் மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றாமல் எம்மால் எமது இலக்கனை அடைவது மிகவும் கடினம் என உணர்ந்தோம். ஆதன் பலனாக எமக்கு கிராம மட்ட அதிகாரிகளுக்கும், கிராம மட்ட சங்கங்களுக்கும் மற்றும் தன்னார்வ தொன்டு நிறுவன சேவையாளர்களுக்கும் “முரண்பாட்டுக் கூருணர்வு” எனும் தொனிப்பொருளில் பயிற்சிப்பட்டறையை நடாத்துவதற்கு மனிதநேய அமைப்புக்களின் கூட்டமைப்பு (**CHA**) நிதி வழங்கியது. இதன் மூலம் நேரடியாக நாங்கள் “முரண்பாட்டுக் கூருணர்வு” தொடர்பாக சொல்லாமல் மக்களோடு மக்களாக வேலைசெய்யும் ஆர்வலர்களுக்கு வழங்கியதன் மூலம் வெற்றிம் கண்டுள்ளோம்.



இதன் பிற்பாடு இன்றைய தலைமுறையினரான பாடசாலை விட்டு விலகும் இளைஞர் யுவதியினரைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கும் பல பயிற்சிகளை வழங்க வேண்டும் என எண்ணி அவர்களுக்கான இலவச கணனிப் பயிற்சி மற்றும் ஆங்கில அறிவினை வளர்ப்பதற்கான பல்வேறு செயற்திட்டங்களை முன்வைத்து சிறந்த பல கணனி அறிவுள்ள இளைஞர் சமுதாயத்தினையும் உருவாக்கியுள்ளோம் உருவாக்கிக்கொண்டும் உள்ளோம்.

இவ்வாறு இருக்கையில் “இலங்கை சோசலீச குடியரசின் 1980ம் ஆண்டின் 31ம் இலக்க வலிந்துதவு சமூகசேவை ஒழுங்கமைப்பக்கள் (பதிவு செய்தலும் மேற்பார்வை செய்தலும்) சட்டத்தின் கீழ் வழங்கப்படும் பதிவுச் சான்றிதழை 06.11.2008 அன்று பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளரின் கீழ்ப் பதிவு செய்யப்பட்டு DS/TG/SS/VSO/77 எனும் இலக்கம் வழங்கப்பட்து.



இதன் பிற்பாடு நாம் உதவிகள் மக்களுக்க வழங்குவது மட்டும் போதாது மக்களுக்கு பயிற்சிகள் இன்றியமையாதது என அறிந்து இலங்கை தொழில் இல்லத்துடன் இணைந்து (JobsNet- SRI LANKA ) இணைந்து சுனாமி மற்றும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பாடசாலையில் இருந்து இடைவிலகிய மற்றும் எபாடசாலைக் கல்வியை முடித்த மாணவர்களுக்கு கணனிப் பயிற்சி நெறியை வழங்கி மூன்று மாதத்திற்கு வேலைத்தளப் பயிற்சியும் வழங்கியுள்ளோம்.



அடுத்தபடியாக பாடசாலைக் கல்வியை முடித்த எதிர்காலச் சந்ததியினரான இளைஞர்களுக்கு தச்சுப் பயிற்சியின் தற்போதைய கேள்வி மற்றும் அதனுடைய மதிப்பானது கிராமத்தில் இருந்து நகர்புறத்திற்கு சென்றடைவது மட்டுமல்லாமல் இன்று சர்வதேசரீதியில் இதற்கான கேள்வி மிகவும் கூடுதலாகக் காணப்படுகின்றது. இன்று தச்சுத் துறைசார் வல்லுனர்களுக்கான வேலைவாய்ப்பு உள்ளூரில் மட்டுமல்லாமல் சர்வதேசரீதியாகவும் உள்ளதை அறிந்து இருபத்தைந்து பேருக்கு தச்சுத் தொழிற்பயிற்சிக்கான ஆரம்பக்கட்டப் பயிற்சி வழங்கப்பட்டது.



மேலும் இன ஒருமைப்பாட்டையும் சமாதானத்தினையும் ஏற்படுத்துவதன் மூலமே அபிவிருத்தியை இட்டுச் செல்லலாம் என்பதனைக் கருத்தில் கொண்டு தமிழ் மற்றும் சிங்கள மொழி பாடசாலைக் கல்வியை முடித்த மற்றும் வேலையற்ற யுவதியினருக்கு அழகுக் கலை (Buaty Culture ) வகுப்பினை நடாதத்தி அதன் மூலம் அவர்களுக்கு தொழில்வர்ப்பினைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்துள்ளோம்.



“ஒன்ற பட்டாலே உண்டு வாழ்வு” என்பதற்கிணங்க 18.012009 அன்று நித்தியபுரிக் கிராமத்தில் ஓர் கலாச்சார நிகழ்வினை நடாத்தியுள்ளோம் இதற்கு பிரதம விருந்தினராக பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர் மற்றும் கலாசார உத்திரோகத்தர், புளியங்குள கிராம சேவகர், கிராம அபிவிருத்திச் சங்க உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டனர். இன்னிகழ்வில் முதியோர் கௌரவிப்பு மற்றும் சிறந்த பெளுபேறுகள் பெற்ற மாணவர் கௌரவிக்கப்பட்டதுடன் கலை நிகழ்ச்சியும் நடாத்தப்பட்டது



மற்றும் தமிழ், சிங்களம் முஸ்லீம் மக்களிடையே ஓர் இன ஒற்றுமைழய நிலைநாட்டுவதற்காக மூவின யுவதிகளையும் இளைஞர்களையும் ஒன்று சேர்த்து ஜம் மற்றும் ஜோக்கற் செய்யும் பயிற்சிப் பட்டறை நடாத்தியுள்ளோம் இதுவும் எமக்கு ஒரு முழுமையாள பங்களிப்பைத் தந்துள்ளது மட்டுமல்லாமல் பூரணமாகவும் முடிவடைந்துள்ளது.



மக்களை ஒன்று சேர்த்து பங்கேற்புடனான கிராம அபிவிருத்தியினை மேற்கொள்வதற்காக கிராம மக்களுடன் சேர்ந்து கிராமங்களின் சுத்தம் மற்றும் வீதிப் புனரமைப்பு வேலைகளில் பங்கேற்றதோடு அவர்களுக்கான தேவைகளையும் முடியுமானளவு நிறைவேற்றியுள்ளோம்.





மேலும் திருகோணமலையானது மிகவும் பிரபல்யமான ஒரு மாவட்டம் ஆகும். இது ஓர் மூவின சங்கமமாகத் திகழ்வதோடு பல்வேறுபட்ட இயற்கை அழகுகள் எழில் கொஞ்சும் நகரம் ஆகும். இதனைக் கருத்தில் கொண்டு வளர்ந்து வரும் நாடுகளின் தற்போதைய முக்கியமான தேவைகளில் ஒன்றாகத் திகழ்வது தகவல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியாகும். அந்த வகையில், இலங்கையைப் பொறுத்தமட்டில் தற்போது கிராமப்புறங்களுக்கு தகவல் தொழில்நுட்பத்தினை விஸ்தரிக்கின்ற ஒரு அரச நிறுவனமாகத் திகழ்வது **e-சமுதாய அபிவிருத்தி முன்னெடுப்பு , சமுதாய உதவித் திட்டம், இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையம்** ஆகும். இன்று திருகோணமலை மாவட்டத்தின் வளர்ச்சிக்காகவும் மாவட்டத்தில் காணப்படும் பல்வேறு வள நிலையங்களையும் சேவை அமைப்புக்களையும் இலத்திரனியல் வலையமைப்பின் ஊடாக இணைத்து அனைத்து மக்களும் அறிந்து கொள்ளக்கூடிய வகையில் திருகோணமலை மாவட்டத்திலே இயங்கிவரும் வலிந்துதவு சமூக சேவை தன்னார்வத் தொண்டு நிறுவனமான **உயர் தகவல் தொழில்நுட்ப கல்வி மற்றும் சமூக அபிவிருத்தி நிறுவனம் (HITESDO- SRI LANKA)** ஊடாக திருகோணமலை மாவட்டத்திற்கான ஒரு இணையத் தளத்தினை உருவாக்கியுள்ளது. இதன் மூலம் திருகோணமலை மாவட்டத்தில் காணப்படுகின்ற அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள், அரச திணைக்களங்கள், போன்றவற்றின் தகவல்களையும் அவற்றின் செயற்பாட்டினையும் இதன் மூலம் அறிய முடியும். மேலும் பிரபல்யம் வாய்ந்த சுற்றுலாத்துறைக்கான பிரதேசங்கள் கல்வி மற்றும் முறைசாராக் கல்விக் கல்வியினைத் தொடர்வதற்கான வழிவகைகள் போன்றவற்றினை இவ் இணையளத்தளத்தினூடாக அறிந்து கொள்ளளக் கூடியதாக இருக்கும். இலங்கையின் முக்கிய தேவையில் ஒன்றான சமாதானத்தினைக் கட்டியெழுப்புவதற்கான இன ஒத்துழைப்பினையும் இன ஒருமைப்பாட்டினையும் மேற்கொள்வதற்கு கேற்ற தகவல்களும் உள்ளடக்கப்படவுள்ளது.

இவற்றைத் தவிர கலாச்சார விடையங்களைப் பிரதிபலிக்கும் நோக்காக அனைத்துமத வணக்கஸ்த் தலங்களும் இணைக்கப்படும். இவ்வாறான ஒரு இணையத்தளத்தின் மூலம் உலகளாவிய ரீதியில் தகவல்களைப் பெற்றுக் கொள்ள வழிவகை எற்படுத்துவது மட்டுமல்லாமல் திருகோணமலை மாவட்டத்தின் அபிவிருத்திக்கான தகவல்களையும் இவ் இணையத்தளம் ஊடாகப் பெற்றுக் கொள்ள முடியும்.

மேலும் இதனை மையமாக வைத்து கிராமப் புறங்களுக்கு தகவல் தொழில்நுட்பம் மற்றும் மொழி அறிவினை (தமிழ், ஆங்கிலம், சிங்களம்) விஸ்தரிப்பதற்கான நடவடிக்கைகளை உயர் தகவல் தொழில்நுட்ப கல்வி மற்றும் சமூக அபிவிருத்தி நிறுவனம் (HITESDO-SRI LANKA) மேற்கொண்டுவருகின்றது.

எதிர்காலத்தில் தகவல் தொழில்நுட்பம் சம்பந்தமான செயற்பாடுகளை அதிகரித்து கிராமங்களை நோங்கி கொண்டுசெல்வதன் மூலம் சிறந்த சமூதாய வளர்ச்சியை காணமுடியும். ஆகவே இவ்வாறான செயற்திட்டங்களை முன்னெடுப்பதற்கு ஆர்வம் உள்ள நிதி நிறுவனங்கள் (DONORS) மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் எம்முடன் தொடர்பு கொண்டு மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இவ் இணையத்தளத்தின் முகவரி: http://www.trinconet.info ஆகும்.